# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,822—1961 දෙසැම්බර් 11 වැනි සඳුදා—11.12.61

12,822 ம் இலக்கம் — 1961 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) — பொது

## விலைக் கட்டளைகள்

விலைக்கட்டளை இல. யே/35/61. உப உணவுப் பொருட்கள் (மாசிக்கருவாடு அல்லது பொனிற்றோ கருவாடு)

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவை அச்சட்டத்தின் 3 (2) பிரிவுடன் சேர்த்து வாசிக்குமிடத்து எனக் களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) யாழ்ப்பாண மாவட்டம், கந்தையா சிவப்பிரகாசம் ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) 1950 ம் ஆண்டு 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் முதலாம் அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள மாசிக் கருவாட்டுக்கு அல்லது பொனிற்றோ கருவாட்டுக்கு கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியின் ஒரு மொத்த அந்தரின் ஆகக் கூடுதலான மொத்த விலையோடும், நிகர் இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி யொருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையோடும் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் முதலாம் அட்டவணையில் 2 ம், 3 ம் பந்தியில் குறிக்கப்பட்டிருக்கின்ற தொகையைக் கூட்டி முறையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி யொருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், சில்லறை வியாபாரி ஒருவர் பாவனையாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்: முதலாம் அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களை இந்த விலைகளுக்குக் கூடுதலாக யாழ்ப்பாணக் காரியாதிகாரியின் எல்லைக்குள் (யாழ்ப்பாண நகரசபை எல்லை உட்பட) விற்கலாகாது என விதிக்கிறேன் ;

(2) 1950 ம் ஆண்டு 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் முதலாம் அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள மாசிக்கருவாடு அல்லது பொனிற்றோ கருவாட்டுக்கு கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியின் ஒரு மொத்த அந்தரின் ஆகக்கூடுதலான மொத்த விலையோடும் நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையோடும், இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் முதலாம், இரண்டாம் அட்டவணைகளில் 2 ம், 3 ம் பந்தியில் குறிக்கப்பட்டிருக்கின்ற தொகையைக் கூட்டி முறையே மொத்த அந்தர் ஒன்றின் மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கின்றேன். முதலாம் அட்டவணையில் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள மாசிக் கருவாட்டை அல்லது பொனிற்றோ கருவாட்டை இந்த விலைகளுக்குக் கூடுதலாக இரண்டாம் அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் விற்கலாகாது என விதிக்கிறேன் ;

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) முதலாம் அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள மாசிக் கருவாட்டையோ அல்லது பொனிற்றோ கருவாட்டையோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு மொத்த அந்தரையோ அதற்குக் கூடுதலான தொகையையோ ஒரே முறையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஆ) முதலாம் அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள எத்தொகையான மாசிக்கருவாட்டையோ அல்லது பொனிற்றோ கருவாட்டையோ ஒரு மொத்த அந்தருக்கு குறைவான தொகையில் உபயோகத்துக்கு அல்லது பாவனைக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் எவரொருவராவது முதலாம் அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள மாசிக் கருவாட்டை அல்லது பொனிற்றோ கருவாட்டை வேறொரு பொருளுடன் சேர்த்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் முதலாம் அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள மாசிக்கருவாட்டை அல்லது பொனிற்றோ கருவாட்டை விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் குறித்த மாசிக்கருவாட்டுக்கு அல்லது பொனிற்றோ கருவாட்டுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்று பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக இருத்தல் அல்லது “ இரு ” என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படும் என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பினும், முதலாம் அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள மாசிக்கருவாட்டை அல்லது பொனிற்றோ கருவாட்டை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்றைக் கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி,

(ஆ) விற்பனை செய்யப்பட்ட மாசிக்கருவாட்டின் அல்லது பொனிற்றோ கருவாட்டின் தொகை (நிறையில்),

(இ) விற்பனை செய்யப்பட்ட தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலையும்,

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(8) இக்கட்டளையின் முதலாம் அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட மாசிக்கருவாடு அல்லது பொனிற்றோ கருவாடு விற்குமிடத்து முதலாம் இரண்டாம் அட்டவணைகளின் 2 ம், 3 ம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிகொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1961 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ந் திகதி மு.ப. 11.45 மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

க. சிவப்பிரகாசம்,
பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி,
யாழ்ப்பாண மாவட்டம்.

**முதலாம் அட்டவணை**

| 1 ம் பந்தி விபரம் | 2 ம் பந்தி மொத்த அந்தர் ஒன்றுக்கு கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்ட ஆகக் கூடுதலான மொத்த விலையுடன் கூட்ட வேண்டிய தொகை ரூ. ச. | 3 ம் பந்தி நிகர இருத்தல் ஒன்றுக்கு கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்ட ஆகக்கூடிய சில்லறை விலையுடன் கூட்ட வேண்டிய தொகை ரூ. ச. |
|---|---|---|
| மாசிக்கருவாடு அல்லது பொனிற்றோ கருவாடு .. | 4 57 .. | 0 5 |

**இரண்டாம் அட்டவணை**

| 1 ம் பந்தி | 2 ம் பந்தி யாழ்ப்பாணக் காரியாதிகாரியின் எல்லைக்குள் (யாழ்ப்பாண நகர சபை உட்பட) மொத்த வியாபாரியின் அந்தர் ஒன்றுக்கு ஆகக் கூடிய மொத்த விலையுடன் கூட்ட வேண்டிய தொகை ரூ. ச. | 3 ம் பந்தி யாழ்ப்பாணக் காரியாதிகாரியின் எல்லைக்குள் (யாழ்ப்பாணம் நகர சபை உட்பட) நிகர இருத்தல் ஒன்றுக்கு சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலையுடன் கூட்டவேண்டிய தொகை ரூ. ச. |
|---|---|---|
| 1. வடமராட்சிக் காரியாதிகாரியின் எல்லைகள் .. | 0 17 .. | 0 0 |
| 2. வலிகாமம் மேற்குக் காரியாதிகாரியின் எல்லைகள் .. | 0 17 .. | 0 0 |
| 3. நெடுந்தீவுக் காரியாதிகாரியின் எல்லைகள் .. | 0 75 .. | 0 1 |
| 4. வலிகாமம் வடக்குக் காரியாதிகாரியின் எல்லைகள் .. | 0 17 .. | 0 0 |
| 5. தென்மராட்சிக் காரியாதிகாரியின் எல்லைகள் .. | 0 17 .. | 0 0 |
| 6. பளைக் காரியாதிகாரியின் எல்லைகள் .. | 0 37 .. | 0 0 |
| 7. கிளிநொச்சி-துணுக்காய் காரியாதிகாரியின் எல்லைகள் .. | 0 47 .. | 0 0 |
| 8. வலிகாமம் கிழக்கு காரியாதிகாரியின் எல்லைகள் .. | 0 17 .. | 0 0 |
| 9. தீவுப் பகுதிக் காரியாதிகாரியின் எல்லைகள் .. | 0 47 .. | 0 0 |
| 10. பூநகரிக் காரியாதிகாரியின் எல்லைகள் .. | 0 47 .. | 0 0 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக இப்பொருட்களை விற்றலாகாது.

12–665.

---

உணவு விலைக்கட்டளை இல. பிரி. 13/61. சீனி (மொத்த, சில்லறை விற்பனைகள்)

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாடுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு மட்டக்களப்பு உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) ஜோன் வின்சென்ற் ஞானப்பிரகாசம் ஆகிய நான் இக்கட்டளையால் :—

(1) 1961 ம் ஆண்டு ஜூலை மாதம் 2 ந் திகதி, பிரி. 9/61 என இலக்கம் இடப்பட்டு, 12,569 ம் இலக்கம் கொண்ட 1961 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3 ந் திகதி வெளிவந்த இலங்கை அரசாங்க அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விலைக் கட்டளையை உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் இரண்டாம் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் உள்ள விலைகளையே, முறையே சுத்தமாக்கப்படாத சிவப்புச் சீனியின் மொத்த அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், சுத்தமாக்கப்பட்ட வெள்ளைச்சீனியின் மொத்த அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், முதலாம் அட்டவணையில் விபரித்துள்ள சீனி இனங்களை இரண்டாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட இடங்களுக்குள் இவ்விலைகளுக்குக் கூடுதலாக விற்கக்கூடாதென உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(3) இதனோடிருக்கும் மூன்றும் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் உள்ள விலைகளையே முறையே சுத்தமாக்கப்படாத சிவப்புச் சீனி இறுத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், சுத்தமாக்கப்பட்ட வெள்ளைச்சீனி இறுத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், முதலாம் அட்டவணையில் விபரித்துள்ள சீனி இனங்களை மூன்றும் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட இடங்களுக்குள் இவ்விலைகளுக்குக் கூடுதலாக விற்கக்கூடாதெனவும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) சீனி 1 அந்தர் அல்லது அதிற்கூடிய தொகையை ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் ;
(ஆ) " சீனி " எவ்வித கருப்பட்டி கலப்பில்லாதிருத்தல் வேண்டும்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடப்பரப்பில் எவராவது சீனியை வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடப்பரப்பில் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது சீனி வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக்காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இறுத்தல் " அல்லது " இறு " என்பது அவோர்டுபோஸ் முறையின் பிரமாண இறுத்தல் முறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் சீனி விற்கும் ஒவ்வொருவரும், அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்ற சீனிக்குக் கொடுக்கப்பட்ட விலை ;
(இ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;
(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

1961 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4 ந் திகதி மு.ப. 9.00 மணிக்கு மட்டக்களப்புக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஜே. வி. ஞானப்பிரகாசம்,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மட்டக்களப்பு மாவட்டம்.

## முதலாம் அட்டவணை

சுத்தமாக்கப்பட்ட வெள்ளைச் சீனி.
சுத்தமாக்கப்படாத சிவப்புச் சீனி.

## இரண்டாம் அட்டவணை

| பத்தி 1<br>பகுதி | பத்தி 2<br>மொத்த அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை. சுத்தமாக் கப்படாத சிவப்புச்சீனி<br>ரூ. ச. | பத்தி 3<br>மொத்த அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை. சுத்தமாக் கப்பட்ட வெள்ளைச்சீனி<br>ரூ. ச. |
|---|---|---|
| 1. மட்டக்களப்பு–மண்முனை வட பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவில் .. | 61.25 .. | 68.23 |
| 2. ஏருவூர், கோறளை, பிரிவுக்காரியாதிகாரியின் பிரிவுகளில் : ஏருவூர், வாழைச்சேனை | 61.25 .. | 68.23 |
| 3. மண்முனை தெற்கு எருவில் போரதீவுக் காரியாதிகாரியின் பிரிவில் .. | 61.25 .. | 68.23 |

## மூன்றும் அட்டவணை

| பத்தி 1<br>பகுதி | பத்தி 2<br>நிகர இறுத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலை. சுத்தமாக் கப்படாத சிவப்புச்சீனி<br>ரூ. ச. | பத்தி 3<br>நிகர இறுத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலை. சுத்தமாக் கப்பட்ட வெள்ளைச்சீனி<br>ரூ. ச. |
|---|---|---|
| 1. மண்முனை வடமேற்கு கிராமச்சங்கத்து எல்லை தவிர்த்து மண்முனை வடபிரிவுக் காரியாதிகாரியின் பிரிவுகளில் .. .. .. | 0 58 .. | 0 65 |
| (ஆ) மண்முனை வடமேற்கு கிராமச்சங்கத்து எல்லையில் .. .. | 0 58½ .. | 0 65½ |
| 2. கோறளை வடக்கு கிராமச்சங்கத்து எல்லையும், கள்ளிச்சை தலைமைக்காரரின் பிரிவும் தவிர்ந்த, கோறளைப் பற்றுப் பிரிவுக்காரியாதிகாரியின் பிரிவில் .. | 0 58 .. | 0 65 |
| (ஆ) கோறளை வடக்கு கிராமச்சங்கத்து எல்லையிலும், கள்ளிச்சை தலைமைக் காரரின் பிரிவிலும் .. .. .. | 0 58½ .. | 0 65½ |
| 3. மண்முனை தெற்கு, எருவில் போரதீவு பற்று பிரிவுக்காரியாதிகாரியின் பிரிவில் | | |
| (அ) மண்முனை தென்கிழக்கு எருவில் கிராமச் சங்க எல்லையில் .. | 0 58 .. | 0 65 |
| (ஆ) மண்முனை தென்மேற்கு கிராமச்சங்க எல்லையில் .. .. | 0 58½ .. | 0 65½ |
| (இ) போரதீவு கிராமச்சங்க எல்லையில் .. .. .. | 0 58½ .. | 0 65½ |
| 4. ஏருவூர்பற்று பிரிவுக்காரியாதிகாரியின் பிரிவில் .. .. | 0 58 .. | 0 65 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே குறிக்கப்பட்ட பொருட்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்குக் கூடுதலாக அவைகளை விற்றலாகாது.

உணவு விலைக் கட்டளை இல. எஸம்/5/61. உப உணவுப் பொருட்கள்.

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினுல் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு அம்பாரை உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), ஆர். பி. எம். கோறளை ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1961 ம் ஆண்டு ஜூலை மாதம் 7 ந் திகதி, எஸம்/4/61 என இலக்கம் இடப்பட்டு 12,514 ம் இலக்கம்கொண்ட 1961 ம் ஆண்டு ஜூலை மாதம் 11 ம் திகதி வெளிவந்த இலங்கை அரசாங்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விலைக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையில் உள்ள 1 ம் பத்தியில் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணையின் 1 ம் பத்தியில் கொடுக்கப்பட்ட பொருட்களையும் சேர்த்துக்கொள்ளுமாறு ஆஞ்ஞையிடுகிறேன்.

1961 ம் ஆண்டு மார்கழி மாதம் 6 ந் திகதி மாலை 3 மணிக்கு அம்பாரைக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஆர். பி. எம். கோறளை,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
அம்பாரை மாவட்டம்.

### அட்டவணை

பத்தி 1
(பொருட்களின் விபரம்)
1. புளி
12–799.

---

உணவு விலைக் கட்டளை இல. என். ஈ. 76. வெள்ளைச் சீனி.

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினுல் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு உப விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு), துவான் இசுனேன் காசிம் ஆகிய நான்—

1) 1961 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8 ம் திகதியைக்கொண்ட 12,569 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1961 ம் ஆண்டு ஜூலை மாதம் 29 ம் திகதியைக்கொண்ட என். ஈ. 72 இலக்கக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம் 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் இந்த விலைக்குக் கூடுதலாக விற்கலாகாது என விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எத்தொகையான வெள்ளைச் சீனி திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்று ஆஞ்ஞையிடுகிறேன்;

(ஆ) ஒரு அந்தருக்கு குறைந்த எத்தொகையான வெள்ளைச் சீனி பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எல்லைகளுக்குள் எவராவது 1 ம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட பொருளை வேறு பொருட்களோடு கலந்து விற்கலாகாது.

(5) அட்டவணை 1 இல் விபரிக்கப்பட்ட பொருளை தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ் வாகனத்தில் அப்பொருட்களுக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இருத்தல்" அல்லது "இரு" என்பது அவோர்டுபோர்ஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படும்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எல்லைகளுக்குள் 1 ம் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருளை மொத்த விற்பனை செய்யும் ஒவ்வொருவரும், சில்லறை விற்பனை செய்யும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.—

(அ) விற்பனை நடந்த திகதி;
(ஆ) விற்கப்பட்ட பொருளின் விபரம்;
(இ) விற்கப்பட்ட பொருளின் நிகர நிறை;
(ஈ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை;
(உ) எவ்விதமான விற்பனை, மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(8) அட்டவணை 1 இல் விபரிக்கப்பட்ட பொருளை விற்கும்போது சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(9) இக்கட்டளை உடஹேவாஹெட்ட பிரிவு அதிகாரி பகுதிக்கு அடங்காது என ஆஞ்ஞையிடுகிறேன்.

1961 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4 ம் திகதி மு.ப. 9.00 மணிக்கு நுவரேலியாக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

டி. ஐ. காசிம்,
உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு),
நுவரேலியா.

1 ம் அட்டவணை

விபரமும் ரகமும்

வெள்ளைச் சீனி

2 ம் அட்டவணை

| 1 ம் பத்தி<br>எல்லைகள் | 2 ம் பத்தி<br>ஒரு அந்தர் வெள்ளைச்சீனியின் ஆகக் கூடிய மொத்த விற்பனை விலை<br>ரூ. ச. | 3 ம் பத்தி<br>ஒரு நிகர றாத்தல் வெள்ளைச் சீனியின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| நுவரேலியா நகரசபை நானுஓயா கிராமச் சங்க சபை பகுதிகளும் | 68 73 | 0 65 |
| ராகலை | 69 03 | 0 65 |
| நில்தண்டாஹின்ன | 70 53 | 0 67 |
| ஹரஸ்பத்த | 69 73 | 0 66 |
| வத்துமுள்ள | 70 03 | 0 66 |
| கும்பள்கமுவ | 70 03 | 0 66 |
| ரம்படை கிராமச் சங்கப் பகுதி— | | |
| ரம்படை டவுன் | 68 73 | 0 65 |
| சங்கிலிபாலம் | 68 73 | 0 65 |
| குடாஓய | 68 73 | 0 65 |
| உடபனே கிராமச் சங்கப் பகுதி— | | |
| பூண்டலுஓயா | 68 73 | 0 65 |
| டிம்புல கிராமச் சங்கப் பகுதி— | | |
| டிம்புல | 68 03 | 0 65 |
| வட்டகொடை | 67 93 | 0 65 |
| கொட்டகலை | 67 63 | 0 65 |
| தலவாகெலை | 67 93 | 0 65 |
| லிந்துல்ல | 67 93 | 0 65 |
| வலஹா | 67 93 | 0 65 |
| டிலிகுல்றி | 68 93 | 0 65 |
| டயகம | 68 93 | 0 65 |
| ஆகரபத்தன | 68 93 | 0 65 |
| மெதபனே கிராமச் சங்கப் பகுதி | 68 73 | 0 65 |
| திஸ்பனே கோரளை | 68 73 | 0 65 |
| பல்லேபனே கோரளை | 68 73 | 0 65 |
| மொறபே | 68 73 | 0 65 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்கலாகாது.

12–800.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது